புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கியத்தில் வழியிடைத் தலைவன்

முனைவர் ஆ.முத்துக்கருங்கன்
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை,
தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச் சுருக்கம்

தலைவியைக் காணச்செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்கு உரைப்பதாக ஐங்குறுநூற்றில் மூன்று பாடல்களும், தலைவியைப் பார்த்து விட்டு நீங்கும் தலைமகன் கூற்றாக அகநானூற்றில் மூன்று பாடல்களும், தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைப்பதாக அகம், ஐங்குறுநூறு, குறுந்தொகை போன்ற இலக்கியங்களில் பல்வேறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இரவுக்குறி வந்து நீங்கும் தலைவன் உரைப்பதாக அகம், குறுந்தொகை போன்ற நூல்களிலும், அல்ல குறிப்பட்டு மீளும் தலைவன் கூற்றில் அகம், குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றிலும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தலைவன் தலைவியைக் காணச் செல்லும் போது இடைநெறியில் நெஞ்சுடன் பேசுவது, பறவைகளை வாழ்த்துதல், தலைவியின் பெற்றோரை வாழ்த்துதல், தலைவியின் ஆற்றலைப்போற்றுதல், தலைவியிடம் தான் கண்ட இன்பத்தைக் கண்டு நலம் பாராட்டுதல், மனம் குளிர்தல், தலைவி, தோழி போன்றோரின் பார்வையில் வழியிடை செல்லும் தலைவன் கவலையுறச் செய்தல், போன்ற செயல்பாடுகளின் மூலம் தலைவன் களவு வாழ்க்கையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றான். வழியில் ஏற்படும் துன்பங்களைப் பொருட்படுத்தாது வருவதில் தலைவனது அஞ்சா நெஞ்சினை உடைய ஆற்றலும் தலைவியின் மீது கொண்ட அன்பும் புலப்படுவதை உள்ளடக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது .

ஆய்வு நெறிமுறைகள்

இந்த ஆய்வில் தலைவனின் மனவுணர்வும் தலைவியின் நிலையும் ஆராயப்படுவதால் உளவியல் அணுகுமுறையும் . பாடற் கருத்துக்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளதால் விளக்கமுறைத் திறனாய்வு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளது .

முன்னுரை

சங்க காலத்தில் களவு வாழ்க்கையில் ஈடுபடும் வழியிடைத் தலைவனின் இயல்பை, அவனுடைய கூற்றுகளில் இருந்தும், தலைவி, தோழி, ஆகியோர் ஆற்றாது அச்சம் பற்றிக் கூறும் கூற்றுக்களிலிருந்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலைவியைக் காணச்செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்கு உரைப்பதாக ஐங்குறுநூற்றில் மூன்று பாடல்களும், தலைவியைப் பார்த்து விட்டு நீங்கும் தலைமகன் கூற்றாக அகநானூற்றில் மூன்று பாடல்களும், தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைப்பதாக அகம், ஐங்குறுநூறு, குறுந்தொகை போன்ற இலக்கியங்களில் பல்வேறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இரவுக்குறி வந்து நீங்கும் தலைவன் உரைப்பதாக அகம், குறுந்தொகை போன்ற நூல்களிலும், அல்ல குறிப்பட்டு மீளும் தலைவன் கூற்றில் அகம், குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றிலும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தலைவன் தலைவியைக் காணச் செல்லும் போது இடைநெறியில் நெஞ்சுடன் பேசுவது, பறவைகளை வாழ்த்துதல், தலைவியின் பெற்றோரை வாழ்த்துதல், தலைவியின் ஆற்றலைப்போற்றுதல், தலைவியிடம் தான் கண்ட இன்பத்தைக் கண்டு நலம் பாராட்டுதல்,

மனம் குளிர்தல், தலைவி, தோழி போன்றோரின் பார்வையில் வழியிடை செல்லும் தலைவன் கவலையுறச் செய்தல், போன்ற செயல்பாடுகளின் மூலம் தலைவன் களவு வாழ்க்கையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றான். மேலும் இயல்பாக நடக்கும் நிகழ்வுகளுக்கு கூட காரணம் கற்பித்து அதனை ஆராயும் மனநிலையில் தலைவன் இருக்கிறான். வழியில் ஏற்படும் துன்பங்களைப் பொருட்படுத்தாது வருவதில் தலைவனது அஞ்சா நெஞ்சினை உடைய ஆற்றலும் தலைவியின் மீது கொண்ட அன்பும் புலப்படுவதை உள்ளடக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமையும்

புணரச் செல்லும் நிலையில் தலைமகன்

ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் பலமுறை சந்தித்துக் கொள்வர். அவ்வாறு செல்லும் தலைவன் நெஞ்சுடன் பேசும் வாய்ப்புண்டு. தலைவி வந்து நிற்கும் செய்தியைப் பாங்கன் கூறக் கேட்ட தலைவன் காமநோயால் துன்பமடைந்த தனக்கு குறியிடத்து வந்து தண்ணளி செய்தாள் என்று தனக்குள் கூறிக்கொள்வதை,

> "................................................நுனங்கிழைப்
> பொங்கரி பரந்த வுன்கன்
> அங்கலிழ் மேனி வசையிய வேமக்கெ"[i]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

பறவைகளை வாழ்த்துதல்

தினைப்புனங் காவலிற்கு நின்ற தலைவியைக் கண்டு மகிழ்ந்த தலைவன் தினைப்புனக் காவலுக்கு காரணமாக இருந்த கிளிகளை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துவதை,

> " வெள்ள வரம்பி னூழி போகியுங்
> கிள்ளை வாழிய பலவே ..............."[ii]

என்ற பாடல் வரிகளும் தாங்கள் சந்தித்துக் கொள்வதற்காகவே கிளிகள் வந்தன. என்று தன் நெஞ்சிற்கு சொல்லி கிளிகளை வாழ்த்துகிறான்.

புணர்ந்து செல்லும் நிலையில் பெற்றோரை வாழ்த்துதல்

தலைவியுடன் குறி யிடத்தில் கூடி இன்புற்ற தலைவன் தலைவியின் பெற்றோரை வாழ்த்திப் பேசுகிறான். அழகிய மேனிகொண்ட இவள் யார் வயிற்றுப் பிள்ளையோ? இவன் தந்தை நீடூடி வாழட்டும். இவளைப் பெற்ற தாய் 'தொண்டியைப்' போல எல்லா நலனும் பெற்று வாழட்டும் என்று தன் நெஞ்சிற்கு கூறியதை,

> "..............................................................
> யார் மகள் கொல்லிவள் தந்தை வாழியர்
> துயரம் உறி இயினள் எம்மே அகல்வயல்
> அறிவனர் அரிந்துந் தருவனர் பெற்றுந்
> தன்சேறு தா அய் மதனுடை நோன்தாள்
> கண்போல் நெய்தல் போர்விற் பூக்குந்
> திண்டேர்ப் பொறையன் தொண்டி
> தன்திறம் பெறுக இவள் ஈன்ற தாயே "[iii]

என்னும் பாடலடிகள் புலப்படுத்தும். இதில் தலைவியின் தந்தையை வாழியர் என்று மட்டும் வாழ்த்தி, தாயைத் 'தொண்டியைப் ' போல எல்லா நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறான் தலைவன்.

தலைவியின் ஆற்றலைப் போற்றுதல்

தனக்கு விதித்திருந்த கட்டுப்பாட்டையும் காவலையும் மீறிய தலைவி தன்னிடம் கொண்ட அன்பால் இரவில் தலைவனுக்கு உறவினளாகவும், காலையில் உறவினர்களுக்கு நல்லவளாகவும் நடந்து கொள்ளும் ஆற்றலைத் தலைவன்,

> " இரண்டறி கல்வினங் காதலோளே
> முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்

முள்ளூர்க் கான நாற வந்து
நள்லென் கங்குல் நம்மோ ரன்னல்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்தும்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணை நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னல் வைகறை யானே?"[iv]

எனத் தலைவன் வியந்து போற்றுகிறான். இந்தப் பாடலின் வழி சங்க காலத்திலிருந்த சமுதாயக் கட்டுப்பாடே தலைவியை இரட்டை வேடம் போட வழி அமைத்துக் கொடுத்ததை

" எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்"[v]

தொல்காப்பியர் எடுத்தியம்புகிறார்.

நலம் பாராட்டுதல்

குளிர்ச்சி பொருந்திய தன்மையும் கண்டாரைத் துன்புறுத்தும் அணங்கின் இயல்பையும் கொண்ட தலைவியிடம் தான்பெற்ற இன்பத்தை அளவிட்டுக் கூற இயலாத நிலையில்,

"..........................................................................
நறுந்தன் ணீரள் ஆரணங் கினளே
இனையள் என்றவட் புனையளவ றியேன்"[vi]

என வியந்து பேசும் தலைவன் காமம் அணங்கு போல் வருத்தி துன்பத்தைத் தந்தாலும் அதைப்போக்கும் துணையாகத் தலைவி அமைவதையும் உணர்கிறான்.
உப்பினால் ஆகிய அணையில் தடைபட்டு நில்லாத வெள்ளம் போல நாணத்தின் எல்லையில் அடங்காத காமம் பொருந்த்தப் பெற்று வந்த தன் துன்பத்தைப் போக்கிய தலைவி வாழ்வாளாக என வாழ்த்திப் பேசும் தலைவன் கூற்றை,

"...................................................................மிகுபெயல்
உப்புச் சிறை வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காமம் நண்ணி
நல்கினர் வாழியர்"[vii]

என்ற பாடலடிகள் உணர்த்தும். மேலும் தன் காதலியின் கண்களுக்கு சுனையில் பூத்த மலர்கள் கூட ஒப்பாகாது என்றும், மயிலை விட மென்மையான சாயலைப் பெற்றவள் என்பதை,

" குன்ற நாடன் குன்றத்துக் கவா அற்
பைஞ்சுனை பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சி லோதி யசை நடைக் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவ
தான்போற் சாயன் மஞளை மரிதே"[viii]

என்ற பாடலால் அறியலாம்.

உடன்போக்கில் வழியிடைத் தலைமகன்

உடன்போக்குச் செல்லும் தலைமகன் தலைவிக்கு உரைப்பனவாக 9 பாடல்களும் நெஞ்சிற்கு உரைப்பனவாக ஒரு பாடலும் உடன்சென்று மீளும் தலைமகன் தலைவிக்கு உரைப்பதாக இரண்டு பாடல்களும் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன.

தலைவியின் அன்பை தலைவன் வியந்து போற்றுதல்

தமக்குத் துன்பம் நேரும்போதுதான் தெய்வத்தின் மீது நம்பிக்கையும் வழிபடும் எண்ணமும் தோன்றும். தமக்கு நேர;ந்த துன்பந்தீர தெய்வத்தை வழிபடச் செல்வோர; அத்தெய்வத்தை வழியிடைக் கண்டால் எங்கனம் மகிழ்வாரோ அதைப்போல தலைவி கிடைக்கப்பெற்றதை எண்ணித் தலைவன் மகிழ்கிறான். இதனை,

' அழிவில முயலு மார;வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டா அங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்

நலமென் பணைத்தோ ளெய்தின மாகலின்''[ix]

என்ற பாடலடிகள் உணர;த்தும். அழிவில்லாத செயலைச் செய்ய விழைவோருக்கு தெய்டவம் துணைநிற்பது போல என்றென்றும் நிலைத்து நிற்கும் காதல் வாழ்க்கையை மேற்கொண்ட தலைவனுக்கு உற்ற துணையாகத் தலைவி அமைந்தாள் என்னும் உட்குறிப்புப் புலனாகின்றது.

தலைவியின் துயருக்கு வருந்திக்கூறும் தலைவன்

நெடுந்தூரம் நடந்து பழக்கமில்லாத தலைவியின் கால்கள் நோகும் என்பதையுணர;ந்த தலைவன் நிழல் உள்ள இடத்தில் தங்கி இளைப்பாறியும் மணல் கண்ட இடத்து சிற்றில் புனைந்து விளையாடியும் தன்னுடன் வருமாறு தலைவன் கூறும் செய்தியைஇ

'.............................................................

நிழல்கான் தோறு நெடிய வைகி

மணல்கான் தோறும் வன்டறைஇ

வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே'' [x]

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. தலைவி தற்போது சிறிது மனவலிமை உடையவளாக இருப்பினும் உடல் வலிமை குன்றிய இளையோள என்பதையுணர;ந்து நடப்பதால் ஏற்படும் களைப்பைப் போக்கி வருமாறு வேண்டுகிறான் தலைவன். இங்கு பெண்மையின் மென்மையினைப் போற்றும் தலைவனின் மனப்பாங்கு புலப்படுகிறது.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் தலைவன் வழியிடைச் செல்லும்போது தலைவியப் புணரச் செய்யும் போது தன் நெஞ்சிற்குச் சொல்லுதல், தனக்கு உதவியாக இருந்ததாக பறவைகளை வாழ்த்துதல், தலைவியைப் பெற்றோரை வாழ்த்துதல், தலைவியின் ஆற்றலைப் போற்றுதல், தலைவியின் நலம் பாராட்டுதல், தலைவியின் அன்பை வியந்து போற்றுதல், தலைவியின் துயருக்கு வருந்துதல் போன்ற நிலைகளில் தலைவன் தன் தலைவியைப் போற்றுகின்றான். இதன்மூலம் தலைவியின் நலனிலையே தலவன் மிகுந்த அக்கறை கொண்டுள்ளான் என்பதும் தவைன் தலைவியை வட்டுப் பிரிதொன்றையும் தன் மனத்தில் எண்ணுவதில்லை என்பதும் பெறப்படுகின்றது.

## அடிக்குறிப்புகள் :

[i] ஐங்குறுநூறு : 174: 2-4

[ii] . மேலது. 281: 1-2

[iii] . நற்றிணை : 8 : 4-10

[iv] . குறுந்தொகை : 312

[v] . தொல்.பொருள்.219

[vi] . குறுந்தொகை : 70; 18-21

[vii] . அகநானுறு: 208: 18-21

[viii] . ஐங்குறுநூறு : 299

[ix] .நற்றிணை : 9: 1-4

[x] .மேலது . 9: 7-9

## துணைநூற்பட்டியல்


1.கதிர் மகாதேவன் (உ.ஆ) - நற்றிணை மூலமும் உரையும் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை .2022

2.தமிழண்ணல் (உ.ஆ) - குறுந்தொகை மூலமும் உரையும் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை .2022

*3.அர.சிங்காரவடிவேலன்*
*(உ.ஆ)* - *ஐங்குறுநூறு மூலமும் உரையும்*
*வர்த்தமானன் பதிப்பகம்*
*சென்னை .2022*

*4.நா.மீனவன்*
*தெ.முருகசாமி (உ.ஆ)* - *அகநானூறு மூலமும் உரையும்*
*வர்த்தமானன் பதிப்பகம்*
*சென்னை .2022*

*இளம்பூரணர் (உ.ஆ.)* - *தொல்காப்பியம் பொருளதிகாரம்*
*சாரதா பதிப்பகம் வெளியீடு,*
*சென்னை.2000*

********* ********* ********** ********* ********* ********** ********** **********